இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 07.06.2026

# தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்ட ராகுல்!

**“தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மிகுந்த மனக்காயமுற்றிருக்கும் கழகத் தோழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், வருகின்ற ஜூன் 8ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் ‘இந்தியா’ கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது” என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துள்ளது.**

**இத்தகைய முடிவை தி.மு.க. எடுக்க வேண்டிய சூழலை உருவாக்கியது காங்கிரஸ் கட்சியே ஆகும். அதிலும் குறிப்பாக, ராகுலின் தன்னிச்சையான, ஆணவமான நடவடிக்கைகளே இதற்குக் காரணம்! தி.மு.க. கூட்டணியில் இருந்துகொண்டே இதற்கு குழிபறிக்கும் செயல்களை ராகுல் செய்தார். அதைப் பச்சையாக வெளிப்படையாகவே செய்தார். இதைச் சகித்துக் கொள்ளும் தேவை தி.மு.க.வுக்கு இல்லை.**

**தனது தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்டுள்ளார் ராகுல். காங்கிரஸ் கட்சியை ஆழக் குழி தோண்டி ஒவ்வொரு மாநிலத்திலும் புதைக்கும் செயலை அவர் செய்து வருகிறார். இதுதான் மற்ற மாநிலங்களிலும் நடந்தது தமிழ்நாட்டில் நடக்கிறது. தான் பிரதமர் ஆவதை விட, பிரவீன் சக்கரவர்த்தியை எம்.பி. ஆக்குவதற்காகத்தான் ராகுல் அலைந்திருக்கிறார். இப்படி ஒரு கெட்ட மதியாளரைத் தூக்கிச் சுமந்தோமே என்ற வருத்தமே மிஞ்சுகிறது.**

2018 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சிலை திறப்பு விழாவில் சோனியா, ராகுலை மேடையில் வைத்துக் கொண்டே “பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன்மொழிகிறேன்” என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். இத்தகைய தலைவர் மு.க.ஸ்டாலினை அவமானப்படுத்துவதைத் தான், நம்பிக்கைத் துரோகம் என்று தெரியாமல் செய்து வந்துள்ளார் ராகுல்.

ஸ்வீட் பாக்ஸ் வாங்கித் தந்து, ‘நீங்கள்தான் என் சகோதரர்’ என்று சொன்னார் ராகுல். ‘நான் யாரையும் சகோதரர் என்று சொன்னதில்லை’ என்றார் ராகுல். இது வெறும் நடிப்புதான் போலும். தன்னை பிரதமர் வேட்பாளராக முன்மொழிவார் என்பதற்காகச் செய்யப்பட்ட நாடகமாகவே கருத வேண்டி உள்ளது.

**ஒரு முறை நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியைக் கடுமையாகப் பேசிவிட்டு, பிரதமர் இருக்கைக்கு வந்து அவரைக் கட்டிப் பிடித்தார் ராகுல். அப்படி கட்டிப் பிடித்துக் கொண்டே நாடாளுமன்றத்தைப் பார்த்து கண் அடிக்கவும் செய்தார் ராகுல். அவரது இரட்டை வேடத்தை அம்பலப்படுத்திய காட்சி அது. அந்த இரட்டை வேடத்தைத் தான் எல்லா மாநிலங்களிலும் நடத்திக் காட்டி வருகிறார் ராகுல்.**

பீகாரில் தேஜஸ்வீயை முதுகில் குத்திய காட்சியை யாரும் மறக்க முடியாது. தேஜஸ்வீக்கு இருந்த மக்கள் செல்வாக்கை கபளீகரம் செய்வதற்காக அவர்களோடு கூட்டணி போட்டார் ராகுல். தேர்தல் நெருங்கி வரும் போது பிரச்சாரமும் சரியாகச் செய்யாமல் வெளிநாடு போனார் ராகுல். தேர்தலுக்குப் பத்து நாட்கள் இருக்கும் போதுதான் தேஜஸ்வீயை முதலமைச்சர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சி ஒப்புக் கொண்டது. அதை அறிவிக்கவும் ராகுல் வரவில்லை. இறுதியாக பீகாரில் தோல்வியைத் தழுவியது இக்கூட்டணி. இதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியவர் ராகுல்தான். இப்படித்தான் **ஒவ்வொரு மாநிலத்திலும் அணைத்துக் கெடுக்கும் செயலை ராகுல் செய்து வருகிறார். அதையே தான் தமிழ்நாட்டிலும் செய்தார் ராகுல்.**

2019 நாடாளுமன்றத் தேர்தலில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சி முன்மொழிவதற்கு முன்னதாகவே அவர் பெயரை முன்மொழிந்தவர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அத்தகைய தலைவர் மு.க.ஸ்டாலின்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக வேண்டும் என்பதற்காக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் ராகுல் பேசினாரா என்றால் இல்லை. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சேர்ந்து ஒரு கூட்டம் பேசாமல் அடம்பிடித்தார், ஆணவமாக நடந்து கொண்டார் ராகுல்.

புதுச்சேரியில் திருபுவனை, மங்களம், காலாப்பட்டு, ராஜ்பவன், உழவர் கரை, காரைக்கால் ஆகிய தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களை எதிர்த்து காங்கிரஸ் கட்சியே போட்டியிட்டது. இத்தகைய போட்டி வேட்பாளர்கள், ராகுலைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். அதாவது, தி.மு.க. வேட்பாளர்கள் வென்று விடக் கூடாது என்பதற்காக ராகுலே போட்டி வேட்பாளர்களை நிறுத்தி இருக்கிறார் என்றுதானே இதற்குப் பொருள்?

ஒரு மாநிலங்களவை இடத்தையும் 28 சட்டமன்றத் தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி பெற்றது. கூட்டணிக் கட்சித் தொண்டர்களின் உழைப்பால் பெற்ற வெற்றியைப் பணயம் வைத்து மாற்று அணிக்கு மூன்று நாட்களுக்குள் காங்கிரஸ் கட்சி மாறியது.

**இவர்கள் புதிதாக ஒருவரோடு சேர்ந்துள்ளார்களே.. அந்த விஜய், காங்கிரஸ் கட்சியைப் பற்றி என்ன சொன்னார்? ‘சில பல கோடிகளைக் கொடுத்து தமிழ்நாடு காங்கிரஸை, ஸ்டாலின் தனது பைக்குள் போட்டுக்கிட்டார்’ என்று பேசினார். இன்று சில பல கோடிகள் கொடுத்துத்தான் காங்கிரஸ் ஆதரவைப் பெற்றாரா விஜய்? காங்கிரஸ் கட்சி எவ்வளவு பெற்றது? அதில் ராகுல் எவ்வளவு பெற்றார்? ஒரு ராஜ்யசபா உறுப்பினர் பதவி மட்டும்தான் காங்கிரஸுக்கு தரப்பட்ட விலையா? அவ்வளவுதானா?**

தேர்தலுக்கு முன்னதாக தி.மு.க.விடம் ஒரு ராஜ்ய சபா. தேர்தலுக்குப் பின்னதாக த.வெ.க.விடம் ஒரு ராஜ்யசபா. இப்போது ஏதோ ராஜ்யத்தையே பிடித்துவிட்டதாக மகிழ்ச்சியில் இருக்கிறது காங்கிரஸ். ‘இந்தியா’ கூட்டணியை இழந்து, ஒரு ராஜ்ய சபா இடத்தைப் பெற்றுள்ளது காங்கிரஸ். கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கி இருக்கிறது காங்கிரஸ்.

இவ்வளவுக்குப் பிறகும், ‘இந்தியா கூட்டணியில் தி.மு.க. இருக்கிறது’ என்று சொல்வதற்கு காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் கிரீஷ் ஜோடங்கருக்கு வெட்கமாக இல்லையா?

**மான ஈனத்தைப் பற்றிக் கவலைப்படாத கட்சியாக காங்கிரஸ் இருக்கலாம். கழகத்தை உயிர்ப்போடு வைத்திருப்பதே இனமானமும், தன்மானமும் தான்.**

**சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களை மனதில் வைத்து தி.மு.க. முடிவுகள் எடுப்பது இல்லை. இனமானம், தன்மானத்தை மனதில் வைத்தே முடிவுகளை எப்போதும் எடுக்கும்.**

---

## இஸ்லாமியர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் முதலில் களத்தில் வருவது தி.மு.க.தான்!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்

# காதர் மொய்தீன் விஜய் ரசிகர் மன்றத் தலைவர் போல் செயல்படுகிறார்!

### தி.மு.க. அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா காட்டமான பதில்!

சென்னை, ஜூன் 7–

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொகிதீன், விஜய் ரசிகர் மன்றத் தலைவர் போல் செயல்படுவது இஸ்லாமியர்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளதாக, தி.மு.க. அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா தெரிவித்துள்ளார்.



தி.மு.க. அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா, சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, இஸ்லாமியர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் முதலில் களத்திற்கு வருவது தி.மு.க.தான் என்று கூறினார். காதர் மொகிதீனுக்கு தகைசால் தமிழர் விருதினை வழங்கி கௌரவப்படுத்தியது தி.மு.க. தான் என்றும் தெரிவித்தார்.

ஆனால், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொகிதீன், விஜய் ரசிகர் மன்றத் தலைவர் போல் செயல்படுவது இஸ்லாமியர்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும், IUML தான் தவெகவோடு இருக்கிறது; ஆனால் இஸ்லாமிய மக்கள் தி.மு.க. பக்கம்தான் இருக்கிறார்கள் என்றும் எம்.எம்.அப்துல்லா உறுதிப்பட தெரிவித்தார்.

பக்ரீத் திருநாளுக்கு மாடு வெட்டுவதற்கு நிபந்தனை விதித்த உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு த.வெ.க.அரசு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்காதது ஏன்? அதுமட்டுமின்றி காதர் மொய்தீனும் எந்த கருத்தும் தெரிவிக்காதது ஏன்?

தமிழ்நாடு சமூக நீதி முற்போக்கு கூட்டணி என புதிதாக பெயர் வைத்துள்ள பிரவீன் சக்கரவர்த்தியின் கருத்துக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்ன பதில் சொல்ல போகிறது என்றும் அவர் வினவினார்.

**இஸ்லாமியர்கள் வருத்தம்**

இஸ்லாமிய மக்கள் தி.மு.க.வுடன் தான் இருக்கிறார்கள் தமிழ்நாட்டில் நூற்றாண்டுகளாக இஸ்லாமியர்கள் அதிகாரத்தில் உள்ளனர் இஸ்லாமியர்கள் நலனை பாதுகாப்பது தி.மு.க.தான் தேர்தலுக்கு முன்பாகவே அவர் சென்றிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் நூற்றாண்டுகளாக இஸ்லாமியர்கள் அதிகாரத்தில் உள்ளனர். மற்ற மாநிலங்களிலும், ஒன்றியத்திலும் ஐயூஎம்எல் அதிகாரத்தில் இருந்துள்ளது. நூற்றாண்டு கனவு நிறைவேறியதாக எதை வைத்து காதர் மொகிதீன் சொல்கிறார்.

இஸ்லாமியர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் முதலில் களத்திற்கு வருவது தி.மு.க. தான். மதிக்கத்தக்க தலைவராக இருக்கக் கூடிய காதர் மொய்தீன், விஜய் ரசிகர் மன்ற தலைவராக செயல்படுவது வருத்தம் அளிக்கிறது.

ஆளுநர் ஆட்சி அமையக் கூடாது உள்ளிட்ட காரணங்களை சொல்லி முதலில் ஆதரவு அளித்தார்கள்; பிறகு அமைச்சரவையில் இடம் பெற்றார்கள்.

த.வெ.க. அமைச்சரவையில் பங்கேற்பதற்காக காதர்மொய்தீன் போன்றோர், போலியான பல காரணங்களை சொல்கிறார்கள் முஸ்லிம் லீக் தான் த.வெ.க.வோடு இருக்கிறது; இஸ்லாமியர்கள் தி.மு.க.வோடு தான் இருக்கிறார்கள். தி.மு.க. வோடு நேற்று இருந்தோம் இன்றும் இருக்கிறோம் நாளையும் இருப்போம் என காதர் மொய்தீன் சொல்லியிருந்தார்; ஆனால் 10 நாட்களுக்குள் என்ன நடந்தது?

த.வெ.க. என்பது பா.ஜ.க. வால் உருவாக்கப்பட்ட கட்சி தான்.

இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.

---

# த.வெ.க. அமைச்சர்களின் சர்ச்சை பேச்சுகள் - ரீல்ஸ் போட்டு விமர்சிக்கும் நெட்டிசன்கள்!

## பொதுமக்களை அலட்சியப்படுத்துவதா? – சமூக ஆர்வலர்கள் கேள்வி!

சென்னை, ஜூன் 7–

தமிழக வெற்றி கழக அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகளின் சமீபத்திய சர்ச்சை பேச்சுகள் அரசியல் வட்டாரங்களில் பெரும் விவாதங்களை ஏற்படுத்தியுள்ளன. தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தவெக ஆட்சியில், பல்வேறு துறை அமைச்சர்கள் ஆய்வு பணிகளில் ஈடுபட்டபோது, சர்ச்சைக்குரிய வகையில் பேசிவருவது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சமீபத்தில் பக்ரீத் பண்டிகையையொட்டி போக்குவரத்து கழகம் சார்பில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் ஆய்வு செய்ய அதிகாரிகளுடன் சென்றிருந்தார். அப்போது, பேருந்துகள் இன்றி மணிக்கணக்கில் காத்திருந்த நூற்றுக்கணக்கான பயணிகள், அமைச்சரை முற்றுகையிட்டு, தென் மாவட்டங்களுக்கான பேருந்துகள் வராமல் 3 முதல் 4 மணி நேரம் வரை காத்திருப்பதாக முறையிட்டனர்.

அப்போது இளைஞர் ஒருவர் தான் முன்பதிவு செய்திருந்த பேருந்து நேரம் கடந்தும் வரவில்லை என அமைச்சரிடம் முறையிட்டார். ஆனால் அதற்கு அமைச்சர் பார்த்திபன் ‘நீ நல்லா சாப்பிட்டிருக்க... நான் இன்னும் சாப்பிடல... நீ நல்லா சாப்பிட்டிருக்க நான் இன்னும் சாப்பிடல...’ என எரிச்சலூட்டும் வகையில் பேசியது பயணிகளிடையே முகம் சுளிக்க வைத்தது.

பேருந்துகள் சரிவர இயக்க நடவடிக்கை எடுக்கப்படும், இனி வரும் காலங்களில் இந்த தவறு சரிசெய்யப்படும், என பதிலளிக்க வேண்டிய அமைச்சர், சம்பந்தம் இல்லாமல் பதிலளித்தற்கு நெட்டிசன்கள் ரீல்ஸ் போட்டு கலாய்த்து வருகின்றனர்.

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் கடந்த மாதம் 29–ஆம் தேதி நடந்த விளையாட்டு விடுதி மாணவர் சேர்க்கை நிகழ்ச்சியில், தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகையில், ‘விவசாயத்தை விட விளை யாட்டுத்துறை மிகவும் கடினமானது, ‘ என்று பேசினார்.

இது, சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த பேச்சுக்கு விவசாயிகள் மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் உழவுத்தொழிலை விட விளையாட்டு கடினமானது என்று கூறுவது விவசாயிகளை இழிவுபடுத்துவது போல் உள்ளது என்று தமிழக விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு விவசாய அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மேலும், பல விவசாயிகள் ரீல்ஸ் மூலம் தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், திருச்சி திருவானைக்காவலில் உள்ள அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் கோயிலில் கடந்த மாதம் 24ம் தேதி ஆய்வு மேற்கொண்டார். அப்போது, கோயில் பிரசாதங்களில் தயாரிப்பு தேதி மற்றும் காலாவதி தேதி ஆகியவற்றை ஆய்வு செய்த அவர், ‘பிரசாத பாட்டில்களில் தயாரிக்கப்பட்ட தேதி மற்றும் காலாவதியாகும் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட தகவல் உண்மை என்பதை எப்படி நம்ப முடியும். அதை எப்படி உறுதி செய்வது,’ என்று கோயில் பணியாளர்களிடம் கேள்வி எழுப்பினார்.

அது, கோயில் பணியாளர்கள் மற்றும் அங்கிருந்த அதிகாரிகளுக்கு தலைச்சுற்றலை ஏற்படுத்தியது. ஒரு பொருள் காலாவதி தேதியை கடந்தும் விற்பனை செய்யப்பட்டால் அதுபற்றி கேள்வி எழுப்பலாம். ஆனால், பிரசாதத்தில் உள்ள காலாவதி தேதி உண்மை என்பதை எப்படி கண்டறிவது என அமைச்சர் கேட்ட விவகாரம் அனைவரையும் பீதியை ஏற்படுத்தியது. இதையும் நெட்டிசன்கள் கலாய்த்து வருகின்றனர்.

அமைச்சர் கீர்த்தனா பேட்டி ஒன்றில், மாற்றுத்திறனாளிகளை ஊனமுற்றவர்கள் என குறிப்பிட்டது சர்ச்சையை கிளப்பியது. இதற்கு பல்வேறு தரப்பினர், மாற்றுத்திறனாளிகள் என்ற சொல்லை அவர்களை கொச்சைப்படுத்துவது போல் பேசியதாக கண்டனம் தெரிவித்தனர். தனது பேச்சுக்கு கடும் எதிர்ப்பு எழுந்ததை தொடர்ந்து உடனடியாக அவர் மன்னிப்பு கோரினார்.

இதேபோல், அமைச்சர் கீர்த்தனா மற்றொரு செய்தியாளர் சந்திப்பின் போது, கோவையில் நடைபெற்ற சிறுமி படுகொலை சம்பவம் குறித்து பெண் என்ற முறையில் உங்கள் கருத்து என்ன எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர், இது குறித்து மாலை 6 மணி அரசியல் கூட்டத்தில் பேசுவோம் என்றும், தலைவர் எடுக்கும் முடிவு சரியாகத்தான் இருக்கும் என்றும் சிரித்தபடி பதிலளித்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆட்சிக்கு வருவதற்கு முன், தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று பேசிய அமைச்சர் கீர்த்தனாவின் இந்த செயலுக்கு நெட்டிசன்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

திருச்சியின் அரியமங்கலம் குப்பை கிடங்கு பிரச்னை தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட திருவெறும்பூர் த.வெ.க. எம்.எல்.ஏ. நவல்பட்டு விஜி, இந்த பிரச்சினைக்கு தீர்வாக, துவாக்குடி அருகே உள்ள குவாரி பள்ளங்களில் குப்பையை கொட்டலாம் என தெரிவித்தார். ரூ.40 கோடி செலவில் குப்பையை அகற்றுவதற்கு பதிலாக, குவாரியில் கொட்டினால் ரூ.30 கோடியே செலவாகும் என்றார். குவாரி பள்ளங்களில் கொட்டப்படும் குப்பை மட்கும்போது உருவாகும் ‘லீச் சேட்’ எனப்படும் நச்சுக்கழிவு நீர், நிலத்தடி நீருடன் கலந்து அந்த பகுதியையே நஞ்சாக்கும் அபாயம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

குப்பை காற்றில்லாத சூழலில் மட்கும்போது மீத்தேன் போன்ற எளிதில் தீப்பற்றக் கூடிய வாயுக்கள் உருவாகும். இதனால் குவாரி பள்ளங்களில் தொடர் தீ விபத்துகள் மற்றும் சுவாசக் கோளாறுகள் ஏற்படலாம் என எச்சரிக்கப்படுகிறது. இதனால், எம்.எல்.ஏ.வின் இந்த யோசனைக்குச் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மத்தியில் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

---

# 2 நாட்களாக இருளில் மூழ்கிய குமரி - திருவள்ளுவர் சிலை!

### மின் கேபிள் பழுதால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம்!

கன்னியாகுமரி கடலின் நடுவே அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மின்சாரம் கடலுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள கேபிள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இந்த கேபிள் சில மாதங்களுக்கு முன்பு பழுதடைந்த நிலையில் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டிருந்தது.




இந்நிலையில், இரண்டு நாட்களுக்கு முன்பு மீண்டும் கேபிளில் ஏற்பட்ட பழுதால் திருவள்ளுவர் சிலைக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டு, சிலை முழுவதும் இருளில் மூழ்கியுள்ளது.

மேலும், கண்ணாடி பாலத்தில் தினமும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை ஒளிரும் அலங்கார மின் விளக்குகளும் கடந்த இரண்டு நாட்களாக எரியாமல் உள்ளன. இதனால் கன்னியாகுமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

திருவள்ளுவர் சிலைக்கு மின்சாரம் வழங்கும் கேபிளை உடனடியாகவும் நிரந்தரமாகவும் சீரமைக்க சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.